# சேலம் நகர சபைக் கூட்டம்.

## ஹிந்திக்கு எதிர்ப்பு.

## ஹிந்தியும் சமஸ்கிருதமும் ஒன்றே.

(நமது நிருபர்)

சேலம், ஜூன். 8.

இன்று காலை சேலம் நகர சபையின் கூட்டமொன்று சேர்மன் தோழர் வி. சீத்தாராம செட்டியார் அவர்கள் தலைமை கூடியது. பட்ஜெட் கமிட்டி, கல்வி, கமிட்டி போன்ற சப் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிறகு கட்டாய ஹிந்தி போதிப்பதற்கு 30 ரூபாய் சம்பளத்தில் ஆசிரியரை வைக்க வேண்டும் என்ற காங்கரஸ் சர்க்கார் உத்திரவு விவாதத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டது. தோழர் சி. ஜீ. செட்டோ, அட்வெகேட் சர்க்கார் கட்டாய ஹிந்தி சம்மந்தமாய் அனுப்பியுள்ள உத்திரவை ஆட்சேபனையுடனும் அதிருப்தியுடனும் ஒப்புக் கொள்ளுவதாக தீர்மானம் கொண்டுவந்தார். தோழர் ஜீ. ராமச்சந்திர நாயுடு ஆமோதித்தார். காங்கரஸ் மெம்பரான தோழர் எம். ஆர். நரசிம்மய்யர் அதிருப்தி ஆட்சேபணை என்ற பதத்தை எடுத்து விடுமாறு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். வக்கீல் தோழர் சுப்புசேஷய்யர் ஆமோதித்தார்.

தோழர் கே. கிருஷ்ணசாமி செட்டியார் ஹிந்தி கட்டாடபாடமாக்குவதைஇக்கவுன்சில் ஆட்சேபிக்கிறது என்ற தீர்மானத்தை பிரேரேபித்ததை தோழர் ஏ. ராமலிங்கம் ஆமோதித்தார். உடனே தோழர் செட்டோவும் நாயுடுகாரும் தங்கள் தீர்மானத்தை வாபஸ் வாங்குவதாகக் கூறினர். சேர்மன் ஹிந்தி கட்டாயபாட உத்திரவு சர்க்கார் உத்திரவானதால் அடியோடு ஹிந்தியை நிராகரிப்பதை யோசிக்குமாறு தோழர் கிருஷ்ணசாமி செட்டியாரை கேட்டார். திருத்தம் கொண்டுவந்த முராரி நரசிம்மய்யர் (காங்கரஸ்) தோழர் செட்டியாரின் தீர்மானத்தை எழுதும்படி வற்புறுத்தவே மற்ற காங்கரஸ் மெம்பர்கள் கலக்கமடைந்து விட்டனர்.

இந்த தீர்மானங்களையும் திருத்தத்தைப் பற்றி முராரி நரசிம்மய்யர் பேசும் போது நம்ம காங்கரஸ் சர்க்கார், நல்ல சர்க்கார். மேட்டூர் தண்ணீர் திட்டத்தில் பெரிய உபகாரம் செய்வதை தடுப்பது போலாகும். ஹிந்தியை ஒப்புக் கொள்வது நல்லது என்றார். தோழர்எஸ். ராஜாகண்ணு செட்டியார் மேட்டூர் தண்ணீர் திட்டத்திற்கு யார் விட்டு அப்பன் பணம் என்றதும் எங்கும் ஒரே சிரிப்பு. பார்ப்பன அம்மையார்தோழர் லலிதாம்பாள் 'காங்கரஸ் ஹிந்தி நல்ல அழகான பாஷை, ஆங்கிலத்தில் கூட ஹிந்தியில் உள்ள கதைகள் காவியங்கள் இல்லை. அதை படித்தாலே மனம் உருகுகின்றது. நான் பல பாஷைகளை படித்திருப்பதோடு பல பாடசாலைகளையும் பார்த்தேன். அதில் ஹிந்தி பாஷையை போலும் பாடசாலையை போலும் கண்டதேயில்லை.

நான் மைசூர் பெங்களூர் போன்ற இடங்களிலுள்ள ஹிந்திபாடசாலையைப்பார்க்கும் போதே மட்டற்ற ஆசையுண்டாகிறது. இந்துஸ்தானி என்று பேசுவதால் பயந்துவிடாதீர்கள். சமஸ்கிருதமே ஒழிய வேறல்ல" என்றதும் (அது தான்வேண்டாம்) என்கிறோம் என்ற ஒரே குரல். தோழர் [illegible] செட்டியார் ஹிந்தி விவாதத்திற்கும் கல்வி அபிவிருத்திக்கும் ஏற்றது என்று கூறினார்.

தோழர் ஜீ. ராமச்சந்திர நாயுடு ஹிந்தியின் அருமை, பெருமை, மகிமை எல்லாம் தனக்கும் தெரியுமென்றும் ஹிந்தி பேசும் நாட்டில் தானும் ஐந்து வருடகாலமிருந்தாயும் தனக்கு ஹிந்தியில் எழுதவும் பேசவும் தெரியுமென்றும், தமிழ் நாட்டில் தாய்மொழியே அபிவிருத்தி இல்லாத காலத்தில் ஹிந்தி கட்டாயபாடமாக்குவதை கண்டிப்பதாயும் ஹிந்தியை பற்றி பல அறிஞர்கள் கூறியுள்ள அபிப்பிராயம் நியாயமாயிருக்கும்போது கட்டாய பாடத்தை தான் நியாயமென சொல்ல முடியாது எனக்கூறினார். பிறகு பலத்த விவாதங்களுக் கிடையே சேர்மன் யோசனை மீது கட்டாய ஹிந்தி போதகர் விஷயத்தை ஆட்சேபணையோடும் அதிருப்தியோடும் ஒப்புக் கொள்ளுவதாக அட்வெகேட் செட்டோவின் தீர்மானம் பெரும்பான்மையான ஓட்டுகளால் நிறைவேறியது. நகர மக்கள் தங்கள் இடங்களில் உட்கார்ந்திருந்ததோடு ஏராளமானவர்கள் சபை நடவடிக்கைகளை கவனிக்க மண்டபம் நிறைய நின்று கொண்டிருந்தனர்.

---

## பிரிவு உபசார விருந்து.

(நமது நிருபர்)

பாகனேரி, ஜூன். 4,

இவ்வூர் மாஜி போஸ்ட்மாஸ்டர் தோழர் டி.எஸ் சுந்திரமய்யர் அவர்கள் இவ்வூரினின்று மாற்றப்பட்டதால் அன்னாருக்கு ஒரு பிரிவு உபசாரவிருந்து நடைபெற்றது.